(ஒன்பதாவது பாராளுமன்றம் - ஐந்தாவது கூட்டத்தொடர்)

**இல. 33.]**

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2024 யூலை 02 செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன,** சபாநாயகர்

**கௌரவ அஜித் ராஜபக்ஷ,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ அங்கஜன் இராமநாதன்**, குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ ரணில் விக்கரமசிங்க,** இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி அவர்கள்.

**கௌரவ தினேஷ் குணவர்தன,** பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

**கௌரவ மஹிந்த அமரவீர,** கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,** போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி நிமல் சிறிபால த சில்வா,** துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்

**கௌரவ டக்ளஸ் தேவானந்தா,** கடற்றொழில் அமைச்சர்

**கௌரவ மனுஷ நாணாயக்கார,** தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண,** கைத்தொழில் அமைச்சர் மற்றும் சுகாதார அமைச்சர்

**கௌரவ நலின் பிரனாந்து,** வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி (கலாநிதி) சுசில் பிரேமஜயந்த,** கல்வி அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

**கௌரவ பிரசன்ன ரணதுங்க,** நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் மற்றும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசான்

**கௌரவ விதுர விக்ரமநாயக,** புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ கஞ்சன விஜேசேகர,** மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர்

**கௌரவ சஜித் பிரேமதாச,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ ரன்ஜித் சியம்பலாபிடிய,** அமைச்சரவை அங்கத்தவர் அல்லாத அரச பெருந்தோட்ட தொழில்முயற்சிகள் மறுசீரமைப்பு அமைச்சர் மற்றும் நிதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) (திருமதி) சீதா அரம்பேபொல,** சுகாதார இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லசந்த அலகியவன்ன,** போக்குவரத்து இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (திருமதி) கீதா சமன்மலீ குமாரசிங்ஹ,** மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அ. அரவிந்த் குமார்,** கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சிறிபால கமலத்,** நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ டி.வீ. சானக,** மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி சிசிர ஜயகொடி,** சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அநுராத ஜயரத்ன,** நீதிமன்ற மற்றும் சிறைச்சாலை அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பிரேமலால் ஜயசேக்கர,** துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சாமர சம்பத் தசனாயக,** ஆரம்பக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பியல் நிசாந்த த சில்வா,** கடற்றொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி மொஹான் பிரியதர்ஷன த சில்வா,** கமத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ றோஹண திஸாநாயக்க,** விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அனுப பஸ்குவல்,** சமூக வலுவூட்டுகை இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜகத் புஷ்பகுமார,** வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அருந்திக்க பர்னாந்து,** நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அசோக்க பிரியந்த,** உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சாந்த பண்டார,** வெகுசன ஊடக இராஜாங்க அமைச்சர்

**கௌரவ விஜித பேருகொட,** பிரிவெனாக் கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கே. காதர் மஸ்தான்,** கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பிரசன்ன ரணவீர,** சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லொஹான் ரத்வத்தே,** பெருந்தோட்டக் கைத்தொழில் மற்றும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) சுரேன் ராகவன்,** உயர் கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சஷீந்திர ராஜபக்ஷ,** நீர்ப்பாசனம் மற்றும் நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜானக வக்கும்புர,** மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் சுற்றாடல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தேனுக விதானகமகே,** நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ச. வியாழேந்திரன்,** வர்த்தக மற்றும் சுற்றாடல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ செஹான் சேமசிங்க,** நிதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ இந்திக அனுருத்த ஹேரத்,** மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கனக ஹேரத்,** தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர்

**கௌரவ டீ. பி. ஹேரத்,** கால்நடை வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

---

**கௌரவ ஏ. எல். எம். அதாஉல்லா**

**கௌரவ கபில அதுகோரல**

**கௌரவ சம்பத் அதுகோரல**

**கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க**

**கௌரவ ஹெக்டர் அப்புஹாமி**

**கௌரவ வஜிர அபேவர்தன**

**கௌரவ அஸோக அபேசிங்ஹ**

**கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல்**

**கௌரவ தவராஜா கலை அரசன்**

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல**

**கௌரவ டலஸ் அழகப்பெரும**

**கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே**

**கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர**

**கௌரவ எம். உதயகுமார்**

**கௌரவ (கலாநிதி) மேஜர் பிரதீப் உந்துகொட**

**கௌரவ அகில எல்லாவல**

**கௌரவ செல்வராசா கஜேந்திரன்**

**கௌரவ கோவிந்தன் கருணாகரம்**

**கௌரவ கயந்த கருணாதிலக்க**

**கௌரவ சட்டத்தரணி சாகர காரியவசம்**

**கௌரவ பைஸால் காசிம்**

**கௌரவ ஜயந்த கெட்டகொட**

**கௌரவ சட்டத்தரணி லக்ஷ்மன் கிரிஎல்ல**

**கௌரவ சட்டத்தரணி உதயன கிரிந்திகொட**

**கௌரவ லலித் வர்ண குமார**

**கௌரவ கெவிந்து குமாரதுங்க**

**கௌரவ வேலு குமார்**

**கௌரவ கருணாதாஸ கொடிதுவக்கு**

**கௌரவ நாலக பண்டார கோட்டேகொட**

**கௌரவ மனோ கணேசன்**

**கௌரவ வீரசேன கமகே**

**கௌரவ உதய கம்மன்பில**

**கௌரவ (டாக்டர்) உபுல் கலப்பத்தி**

**கௌரவ உதயகாந்த குணதிலக்க**

கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன

கௌரவ யதாமிணீ குணவர்தன

கௌரவ (கலாநிதி) நாலக கொடஹேவா

கௌரவ எஸ்.எம். சந்திரசேன

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ

கௌரவ பியங்கர ஜயரத்ன

கௌரவ (பேராசிரியர்) சன்ன ஜயசுமன

கௌரவ தயாசிறி ஜயசேக்கர

கௌரவ எம். எஸ். தௌபீக்

கௌரவ குலசிங்கம் திலீபன்

கௌரவ ஷான் விஜயலால் த சில்வா

கௌரவ பழனி திகாம்பரம்

கௌரவ துமிந்த திசாநாயக்க

கௌரவ எஸ். பீ. திசாநாயக்க

கௌரவ (திருமதி) மஞ்சுலா திசாநாயக

கௌரவ மயந்த திசாநாயக்க

கௌரவ விமலவீர திசாநாயக்க

கௌரவ சாரதீ துஷ்மந்த

கௌரவ (மேஜர்) சுதர்ஷன தெனிபிடிய

கௌரவ சட்டத்தரணி பிரேம்நாத் சி. தொலவத்த

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன

கௌரவ அசங்க நவரத்ன

கௌரவ புத்திக பத்திறண

கௌரவ நிமல் பியதிஸ்ஸ

கௌரவ (பேராசிரியர்) ஜீ.எல். பீரிஸ்

கௌரவ நிரோஷன் பெரேரா

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து

கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே

கௌரவ ஜகத் பிரியங்கர

கௌரவ (திருமதி) முதிதா பிரிஸான்தி

கௌரவ ரோஹண பண்டார

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார

கௌரவ (பேராசிரியர்) ரஞ்சித் பண்டார

கௌரவ எஸ்.எம். மரிக்கார்

கௌரவ இம்ரான் மஹ்ரூப்

கௌரவ எஸ்.சீ. முதுகுமாரண

கௌரவ சட்டத்தரணி எஸ். எம். எம். முஸ்ஸாரப்

கௌரவ மொஹமட் முஸம்மில்

கௌரவ சட்டத்தரணி அநுர பிரியதர்ஷன யாபா

கௌரவ சட்டத்தரணி வசந்த யாப்பாபண்டார

கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க

கௌரவ நிபுண ரணவக

கௌரவ குமாரசிறி ரத்னாயக்க

கௌரவ கெஹெலிய ரம்புக்வெல்ல

கௌரவ அலி சப்ரி ரஹீம்

கௌரவ இஷாக் ரஹுமான்

கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ ஹர்ஷண ராஜகருணா

கௌரவ சமல் ராஜபக்ஷ

கௌரவ (டாக்டர்) திலக் ராஜபக்ஷ

கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ

கௌரவ (கலாநிதி) வீ. இராதாகிருஷ்ணன்

கௌரவ எம். ராமேஷ்வரன்

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்

கௌரவ நிமல் லான்சா

கௌரவ காமினி லொக்குகே

கௌரவ காமினி வலேபொட

கௌரவ நயன வாசலதிலக

கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ

கௌரவ க.வி. விக்னேஸ்வரன்

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன

கௌரவ எம். டப்ளியு. டீ. சஹன் பிரதீப் விதான

கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே

கௌரவ ஹேஷா விதானகே

கௌரவ சனாதிபதி சட்டத்தரணி ஜயந்த வீரசிங்க

கௌரவ டீ. வீரசிங்க

கௌரவ வீரசுமன வீரசிங்ஹ

கௌரவ (கலாநிதி) சரத் வீரசேக்கர

கௌரவ திலிப் வெதஆரச்சி

கௌரவ குமார வெல்கம

கௌரவ சிவஞானம் சிறீதரன்

**கௌரவ ஜகத் சமரவிக்ரம**

**கௌரவ ஜயந்த சமரவீர**

**கௌரவ மைத்ரீபால சிறிசேன**

**கௌரவ எம்.ஏ. சுமந்திரன்**

**கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி**

**கௌரவ வடிவேல் சுரேஷ்**

**கௌரவ சட்டத்தரணி டப்ளியூ. டீ.ஜே. செனவிரத்ன**

**கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன**

**கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்**

**கௌரவ எச்.எம்.எம். ஹரீஸ்**

**கௌரவ கபீர் ஹஷீம்**

**கௌரவ (பேராசிரியர்) சரித்த ஹேரத்**

**கௌரவ ஜயரத்ன ஹேரத்**

**கௌரவ சமன்பிரிய ஹேரத்**

**கௌரவ மர்ஜான் பளீல்**

**கௌரவ ஏ.எச்.எம். பௌஸி**

திருமதி குஷானி ரோஹனதீர, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. சமிந்த குலரத்ன, பணியாட்டொகுதிப் பிரதானியும் பிரதிப் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும்

திரு. ஹன்ஸ அபேரத்ன, உதவிச் செயலாளர் நாயகம்

**சபாநாயகர் அவர்களால் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 16 இன் பிரகாரம் 2024 யூன் 25 ஆம் திகதி வெளியிடப்பட்ட அறிவித்தலின்படி பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. பாராளுமன்ற கூட்டத்திற்கு அழைக்கும் சபாநாயகர் அவர்களால் வெளியிட்ட பின்வரும் அறிவித்தலைப் பாராளுமன்ற செயலாளர் நாயகம் வாசித்தார்:—**

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2390/07 - 2024 ජූනි මස 25 වැනි අඟහරුවාදා - 2024.06.25
2390/07 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு யூன் மாதம் 25 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### சபாநாயகரின் அறிவித்தல்

**2024, யூலை 02 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தைக் கூட்டுதல்**

கௌரவ பிரதம அமைச்சரின் வேண்டுதலுக்கிணங்க பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளில் 16 ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம், 2024, யூலை 02 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணிக்குப் பாராளுமன்றத்தைக் கூடுவதற்கு அழைப்பாணை விடுத்திருக்கிறேன் என்பதை பாராளுமன்ற சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன ஆகிய நான் இத்தால் அறிவிக்கிறேன்.

**மஹிந்த யாப்பா அபேவர்தன,**
சபாநாயகர்.

ஸ்ரீ ஜயவர்தனபுரக் கோட்டே,
2024, யூன் 25.

EOG 06-0169

**2. சனாதிபதியின் செய்திகள்:** சனாதிபதி பின்வருமாறு அறிவித்தார்:—

ශ්‍රී ලංකා ජනාධිපති
இலங்கை சனாதிபதி
President of Sri Lanka

எனது இல: பிஎஸ்/சிஎஸ்ஏ/00/4/5/1

2024 யூன் மாதம் 22 ஆந் திகதி

மாண்புமிகு மஹிந்த யாப்பா அபேவர்த்தன அவர்கள்
சபாநாயகர்
இலங்கை பாராளுமன்றம்

மாண்புமிகு சபாநாயகர் அவர்களே

**(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்**

(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 12 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, மக்களிடையே அமைதியைப் பேணுவதற்கான தேவையைக் கருத்திற்கொண்டு, முதலாம் அட்டவணையில் குறித்துரைத்துக் காட்டப்படும் ஆயுதந்தாங்கிய படையின் சகல உறுப்பினர்களும் அதன் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைத்துக் காட்டப்பட்ட பிரதேசங்களில் மக்களிடையே அமைதியைப் பேணுவதற்காக அழைக்கப்படுகின்றனர் என ஆணையிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, மேற்படி கட்டளைச் சட்டத்தின் 21(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2(3) பிரிவுக்கமைய அதனை இத்தால் பாராளுமன்றத்துக்கு அறிவிக்கின்றேன்.

இங்ஙனம் - அன்புள்ள

ரணில் விக்கிரமசிங்க
சனாதிபதி

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு
Democratic Socialist Republic of Sri Lanka

**3. சபாநாயகரின் அறிவித்தல்கள்:** சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல்கள் விடுத்தார்:—

**I**

“அரசியலமைப்பின் 121(1) எனும் உறுப்புரையின் பிரகாரம் உயர் நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தப்பட்ட **“பொருளாதார நிலைமாற்றம்”** எனும் தலைப்பிலான சட்டமூலம் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்தினை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதை நான் பாராளுமன்றத்திற்கு அறிவிக்க விரும்புகின்றேன்.

குறிப்பிட்ட சட்டமூலம் அரசியலமைப்புடன் பொருந்துகின்றதா என்பது தொடர்பாக உயர் நீதிமன்றத்தின் தீர்மானம் ஆய்ந்து முடிவுகண்டுள்ளதுடன், கவனமான பரிசீலிப்பின் பேரில், சட்டமூலத்தின் ஏற்பாடுகள் அரசியலமைப்புடன் முரண்படாதிருக்கச் செய்யும் திருத்தங்களைப் பின்வருமாறு பிரேரித்திருக்கின்றது:—

1) வாசகம் 8 இல் உள்ளடங்கியுள்ள 4 ஆம் உறுப்புரையினை நீக்குவதன் மூலம் வாசகம் 8 திருத்தப்பட வேண்டும் ஏனெனில் பாராளுமன்ற மேற்பார்வை 43 ஆம் உறுப்புரையினாலும் 148 ஆம் உறுப்புரையினாலும் போதிய அளவு உள்ளடக்கப்பட்டுள்ளது.

2) சுயாதீனமான ஒழுங்குறுத்துனர் ஒருவரை உருவாக்கல் சட்டவாக்கத்தினைத் திருத்துவதன் மூலம் தாபிக்கப்படலாம் என்பதால் வாசகம் 13 (ஆ) நீக்கப்பட வேண்டும் எனத் தேவைப்படுத்தப்படுகின்றது.

3 ) பங்குகளையும் தொகுப்புப் பங்குகளையும் தொகுதிக் கடன்களையும் அதே போன்ற சொத்துக்களையும் கொள்வனவு செய்வதற்கும் வைத்திருப்பதற்கும் விற்பதற்கும் சட்டபூர்வமான அமைப்பான “பொருளாதார ஆணைக்குழுவினை” வலுவூட்டுவதற்கு வாசகம் 13 திருத்தப்பட வேண்டும்.

4 ) வாசகம் 15 அரசியலமைப்புடன் ஒவ்வாதுள்ளதால் மூன்றில் இரண்டு பெரும்பான்மையினாலும் குடிமக்கள் ஒப்பங்கோடலினாலும் மாத்திரமே நிறைவேற்றப்படலாம். ஆனால், அரச காணிகளை வேறாக்கல் அல்லது உடைமையுரிமை மாற்றம் செய்தல் தொடர்பான சனாதிபதியின் தத்துவங்களை அங்கீகரிக்கும் திருத்தங்கள் இந்த நீதிமன்றத்தினால் கலந்துரையாடப்பட்டவாறான வகையிலும் வடிவிலும் நிறைவேற்றப்பட்டால், ஏற்பாட்டினை ஓர் எளிய பெரும்பான்மையுடன் நிறைவேற்ற முடியும்.

5 ) தெளிவு மற்றும் வெளிப்படைத்தன்மையைப் பேணும் நோக்கங்களுக்காக ஒழுங்குவிதிகள் மூலம் பொருளாதார ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதியின் வேலைவாய்ப்புக்குரிய தகைமைகள், அனுபவம், நியதிகள் மற்றும் நிபந்தனைகள் ஆகியவற்றை விதித்துரைப்பதற்காக வாசகம் 26 இனைத் திருத்துவதற்குத் தேவைப்படுத்தப்படுகிறது.

6 ) தெளிவைப் பேணும் நோக்கங்களுக்காக அதனகத்துள்ள சூழமைவினுள் ‘முதலீடு’ என்ற பதத்தின் முக்கியத்துவத்தைக் கோடிட்டுக்காட்டி ‘முதலீட்டாளர்’ என்ற பதத்தை ‘முதலீடு’ என்ற பதத்தின் மூலம் பிரதியீடு செய்யப்படுவதற்காக வாசகம் 45 இனைத் திருத்துவதற்குத் தேவைப்படுத்தப்படுகிறது.

7 ) (2 ) ஆம் அல்லது (4) ஆம் உட்பிரிவுகளின் கீழ் விசாரணை அல்லது கோரிக்கை ஒன்றுக்கு பதிலளிப்பதற்கு குறித்துரைக்கப்பட்ட நிறுவனத்தின் மூலமான ஏதேனும் மறுப்பு, ஏற்றுக்கொள்ளாமை அல்லது புறக்கணிப்பை அமைச்சரவைக்கு ஆற்றுப்படுத்துவதற்காக அமைச்சருக்கு ஒரு காலவரையறையைக் குறித்துரைப்பதன் மூலம் தேவையற்ற தாமதங்களை தவிர்ப்பதற்காக வாசகம் 46 (5 ) திருத்தப்பட வேண்டும்.

8 ) முதலீட்டு இலங்கைச் சபைக்கான உறுப்பினர்களின் நியமனம் தொடர்பாக திறைசேரித் திணைக்களத்தின் செயலாளருடனான கலந்தாலோசனையின் தேவைப்பாட்டை நீக்குவதற்காக வாசகம் 48(2) திருத்தப்பட வேண்டும்.

9 ) மேலே குறிப்பிடப்பட்ட வாசகத்திலுள்ள நீக்கப்பட்ட சட்டத்துக்கான அனைத்துக் குறிப்பீடுகளையும் அகற்றுவதற்காக வாசகம் 55 (2)ஆ திருத்தப்பட வேண்டும்.

10 ) இப்பிரிவின் கீழ் ஆக்கப்படும் ஒவ்வொரு கட்டளையும் அது ஆக்கப்பட்டு மூன்று மாதங்களுள் அங்கீகாரத்திற்காக பாராளுமன்றதின் முன் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்ற ஒரு தேவைப்பாட்டை உள்ளடக்குவதற்காக வாசகம் 57 திருத்தப்பட வேண்டும்.

11 ) முதலீட்டு வலயங்களைத் தாபிப்பதற்காக இலங்கை வலயங்களுக்கு ஆதனங்களைக் கொள்ளுவதற்கான தத்துவத்தை அளிக்கும் வாசகம் 64(ஈ) நீக்கப்பட வேண்டும். இலங்கை வலயங்களின் அதிகாரம் முதலீட்டு வலயங்களுக்குத் தேவையான காணிகளை முதலீட்டு ஆணைக்குழுவிற்கு விதந்துரைப்பதற்காக மட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன் காணி கொள்வதற்கான அதிகாரம் அதற்கில்லை என்பதை இந்தத் திருத்தம் பிரதிபலிக்கிறது.

12 ) இலங்கை வலயங்களின் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தருக்கான தொழிலின் தகைமைகள், அனுபவம், மற்றும் நியதிகள் மற்றும் நிபந்தனைகள் ஆகியவை ஒழுங்குவிதிகள் மூலம் குறிப்பிடப்படுதல் வேண்டும் எனக் குறித்துரைப்பதற்கு வாசகம் 75 திருத்தப்பட வேண்டும். இந்த ஏற்பாடு பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் போன்ற உயர் பதவிகளுக்கு தகைமையற்றவர்களின் நியமனத்தைத் தடுத்து போதுமான தகைமைகள் மற்றும் அனுபவத்துடன் கூடிய ஆட்களின் நியமனத்தை உறுதிசெய்வதை இலக்காகக் கொண்டுள்ளது.

13 ) அனுமதிச் செயன்முறையில் மேம்படுத்தப்பட்ட நடைமுறை நியாயமானதன்மை மற்றும் வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்தி குறித்துரைக்கப்பட்ட நிறுவனங்களுக்காக நிராகரித்தல் அல்லது மறுத்தலுக்கான எழுத்துமூலமான காரணங்களை வழங்குவதற்கான காலப்பகுதியை பதினைந்து நாட்களிலிருந்து இருபத்தொரு நாட்கள் வரை நீடிப்பதற்கு வாசகம் 90 (2) திருத்தப்படுதல் வேண்டும்.

14 ) குறித்துரைக்கப்பட்ட நிறுவனம் விசாரனையொன்றுக்கு அல்லது வேண்டுகோளுக்கு பதிலளிப்பதற்கு நிராகரித்தால், மறுத்தால், அல்லது தவறினால் இலங்கை வலயங்கள் உடனடியாக அமைச்சருக்கு அதனைத் தெரியப்படுத்துதல் வேண்டும் என்பதைக் குறித்துறைக்கும் புதியதொரு உபவாசகத்தை உள்ளடக்குவதற்கு சட்டமூலத்தின் வாசகம் 90 திருத்தப்படுதல் வேண்டும். அதன்பின்னர் இரண்டு வாரங்களுக்குள், அமைச்சர் பொருத்தமான நடவடிக்கைக்காக அமைச்சரவைக்கு அவ்விடயத்தைப் பரவலாக்கல் வேண்டும். மறுக்கப்பட்ட தகவல் வேண்டுகோளின் போது உரியநேரத்திலான தீர்மானத்தையும் வெளிப்படைத்தன்மையையும் உறுதிசெய்வதை இத்திருத்தம் இலக்காகக் கொண்டுள்ளது.

15 ) தொழிலுடன் தொடர்புடைய எந்தவொரு நியதிகளும் நிபந்தனைகளும் முதலீட்டுச் சபைச் சட்டத்தில் குறிப்பிடப்படாதிருப்பதினால், “1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ்” எனும் சொற்களை நீக்குவதற்கு சட்டமூலத்தின் வாசகம் 94 (2) (5) திருத்தப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படுகின்றது.

16 ) இந்தப் பிரிவின் கீழ் வெளியிடப்படும் ஒவ்வொரு கட்டளையும் அதன் வெளியீட்டுத் தினத்திலிருந்து மூன்று மாதங்களினுள் அங்கீகாரத்திற்காக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் எனத் தேவைப்படுத்தப்படுவதற்கு வாசகம் 96 திருத்தப்படுதல் வேண்டும். இந்தக் கட்டளை பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தின் பேரில் மாத்திரமே அமுலுக்கு வருதல் வேண்டும். இந்தச் சட்டமூலத்தின் கீழ் வழங்கப்படும் கட்டளைகள் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்திற்காக பாராளுமன்றத்திற்கு ஆற்றுப்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் இந்தச் சட்டமூலத்தின் ஏனைய வாசகங்களுடன் ஒத்திசைவதை உறுதிசெய்வதற்காக திருத்தங்கள் ஒருங்கிணைக்கப்படுதல் வேண்டும்.

17) உற்பத்தித்திறன் ஆணைக்குழு நிறைவேற்றுப் பணிப்பாளரின் தகைமைகள், அனுபவம் மற்றும் நியதிகளும் நிபந்தனைகளும் ஒழுங்குவிதிகள் மூலம் குறித்துரைக்கப்படவிருக்கிறது என்பதை உள்ளடக்குவதற்காக வாசகம் 147 திருத்தப்படவுள்ளது.

18) இலங்கை பொருளாதார மற்றும் சர்வதேச வர்த்தக நிறுவனப் பணிப்பாளரின் தகைமைகள், அனுபவம் மற்றும் நியதிகளும் நிபந்தனைகளும் ஒழுங்குவிதிகள் மூலம் குறித்துரைக்கப்படுதல் வேண்டும் எனக் குறிப்பிடுவதற்காக வாசகம் 175 திருத்தப்படவுள்ளது.

19 ) வாசகம் 192 (1) மற்றும் (2) முழுமையாக நீக்கப்படத் தேவைப்படுத்தப்படுகின்றது.

20) வாசகம் 55 இல் முன்மொழியப்பட்ட திருத்தத்திற்கு ஒத்திசைவாக நீக்கப்பட்ட சட்டத்தின் குறிப்புகளை அகற்றுவதற்கு வாசகம் 194 (2) (க) திருத்தப்படவுள்ளது. மேலும், ஊழியர் ஒருவருக்குச் செலுத்தப்படக்கூடிய நியதிச் சட்டக் கட்டணங்களைக் கணக்கிடும்போது அத்தகைய ஊழியர் முதலீட்டுச் சபையில் பணிபுரிந்த காலப்பகுதி கவனத்தில் கொள்ளப்படுதல் வேண்டும் எனக் குறிப்பிடுகின்ற காப்பு வாசகம் ஒன்று சேர்க்கப்படவுள்ளது.

21) தன்னார்வ ஓய்வூதியத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் குறிப்பிட்ட காலப் பகுதியை ஒருங்கிணைப்பதற்காக வாசகம் 194 (2) (ங) திருத்தப்பட வேண்டும்.

22) 'BOI' எனும் தலைப்பெழுத்துச் சொல் மற்றும் 'அமைச்சர்' எனும் சொல்லின் வியாக்கியானம் ஆகியவற்றினை இடுவது தொடர்பில் வாசகம் 195, வியாக்கியான வாசகம் திருத்தப்பட வேண்டும்.

23) "இச்சட்டத்தின் 'வேறு ஏதாவது எழுத்திலான சட்டங்கள்" எனும் குறிப்பீட்டினைத் திருத்துவதற்காகவும் அது பின்வருமாறு வாசிக்கப்படுவதற்காகவும் வாசகம் 196 திருத்தப்படவேண்டும், "இச்சட்டத்தின் சிங்கள மற்றும் தமிழ் உரைகளுக்கு இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்."

24) 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க இலங்கை முதலீட்டுச் சபை சட்டம் பற்றிய குறிப்பீட்டினை நீக்குவதன் மூலம் வாசகம் 55 (2) (ஆ) (iv ) இற்கான ஏற்பாடு திருத்தப்பட வேண்டும் ஏனெனில் அவ்வாறான குறிப்பீடு உண்மையான நிலையினைப் பிரதிபலிக்காது.

25 ) விதிகளை ஆக்கும் தத்துவத்தினை அரசியலமைப்புடன் ஒத்திசையச் செய்வதற்காக வாசகம் 55 (2) (ஆ) (v ) நீக்கப்படல் வேண்டும்.

மேற்குறிப்பிடப்பட்டவற்றுக்கு உட்பட்டு, அவசியமான திருத்தங்கள் மேற்கொள்ளப்படுமாயின், சட்டமூலமும் அதன் ஏற்பாடுகளும் அரசியலமைப்புடன் ஒத்திசைவனவாக ஆகும் என்பதுடன் அவற்றினை எளிய பெரும்பான்மையுடன் நிறைவேற்ற முடியும் எனும் அபிப்பிராயத்தினை உயர் நீதிமன்றம் கொண்டுள்ளது.

உயர் நீதிமன்றத்தின் இத்தீர்மானம் இன்றைய சபை நடவடிக்கைகளின் உத்தியோகபூர்வ அறிக்கையில் அச்சிடப்பட வேண்டுமென நான் உத்தரவிடுகின்றேன்."

**II**

"அரசியலமைப்பின் 121(1) எனும் உறுப்புரையின் பிரகாரம் உயர் நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தப்பட்ட 'பகிரங்க நிதிசார் முகாமைத்துவம்' எனும் தலைப்பிலான சட்டமூலம் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்தினை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதை நான் பாராளுமன்றத்திற்கு அறிவிக்க விரும்புகின்றேன்.

குறிப்பிட்ட இத்தீர்மானத்தில், சட்டமூலத்தின் அரசியலமைப்புடன் பொருந்தும் தன்மையினை உயர் நீதிமன்றம் பின்வருமாறு தொகுத்துள்ளது:—

**வாசகம் 3(2)(ஆ)(iv)** ‘ நீதிச் சேவை உறுப்பினர்கள்’ என்பதன் வரைவிலக்கணம் ஆகியன 3 ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் உறுப்புரை 4 (இ) உடன் ஒவ்வாதுள்ளதால், உறுப்புரை 12(1) மற்றும் 108 ஆம் உறுப்புரை ஆகியன பாராளுமன்றத்தின் விசேட பெரும்பான்மையினால் மாத்திரமே நிறைவேற்றப்படலாம் என்பதுடன் ஓர் ஒப்பங்கோடலில் மக்களினால் அங்கீகரிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், வாசகம் 71 இல் உள்ள ‘நீதிச் சேவை உறுப்பினர்கள்’ என்பதன் வரைவிலக்கணம் நீக்கப்பட்டு, வாசகம் 3(2)(ஆ) நீக்கப்பட்டு, உயர் நீதிமன்றத் தீர்மானத்தின் தொகுப்பில் குறிப்பிடப்பட்டுள்ள புதிய உப வாசகத்தினால் பதிலீடு செய்யப்பட்டால், இவ்வாறான ஒவ்வாமை நீங்கும்.

**வாசகம் 5(2)(ஊ) உறுப்புரை** 12(1), 43(1) மற்றும் 52(2) மீறுகின்றமையால், **வாசகம் 5 (2)(ஊ)** இனைப் பாராளுமன்றத்தின் விசேட பெரும்பான்மையுடன் மாத்திரமே நிறைவேற்ற முடியும். எவ்வாறாயினும்**,** உயர் நீதிமன்றத் தீர்மானத்தின் தொகுப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு **வாசகம் 5(2)(ஊ)** திருத்தப்பட்டால் குறிப்பிட்ட ஒவ்வாமை நீங்கும்.

**வாசகம் 32(3)** அரசியலமைப்பின் 3 ஆம் உறுப்புரையினையும் 12(1) எனும் உறுப்புரையினையும் மீறுவதால் இது பாராளுமன்றத்தின் விசேட பெரும்பான்மையினால் நிறைவேற்றப்பட்டு குடிமக்கள் ஒப்பங்கோடலினால் அங்கீகரிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், உயர் நீதிமன்றத் தீர்மானத்தின் தொகுப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு **வாசகம் 32(3)** திருத்தப்படின் குறிப்பிட்ட ஒவ்வாமை நீங்கும்.

**வாசகம் 32(4)** அரசியலமைப்பின் 3 ஆம் உறுப்புரையுடனும் 12(1) எனும் உறுப்புரையுடனும் 148 ஆம் உறுப்புரையுடனும் 156 (இ) எனும் உறுப்புரையுடனும் ஒவ்வாதுள்ளதால், இது பாராளுமன்றத்தின் விசேட பெரும்பான்மையினால் மாத்திரமே நிறைவேற்றப்படவேண்டும் என்பதுடன் குடிமக்கள் ஒப்பங்கோடலினால் அங்கீகரிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், உயர் நீதிமன்றத் தீர்மானத்தின் தொகுப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு **வாசகம் 32(4**) திருத்தப்படின் குறிப்பிட்ட ஒவ்வாமை நீங்கும்.

**வாசகம் 34(2)** அரசியலமைப்பின் 149 ஆம் உறுப்புரையினை மீறுகின்றமையினால், இது பாராளுமன்றத்தின் விசேட பெரும்பான்மையினால் மாத்திரமே நிறைவேற்றப்படவேண்டும். எவ்வாறாயினும், உயர் நீதிமன்றத் தீர்மானத்தின் தொகுப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு **வாசகம் 34(2)** திருத்தப்படின் குறிப்பிட்ட ஒவ்வாமை நீங்கும்.

**வாசகம் 38(3),** அரசியலமைப்பின் 12 (1) எனும் உறுப்புரையின் ஏற்பாடுகளுடனும் 148 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுடனும் ஒவ்வாதுள்ளதால், பாராளுமன்றத்தின் விசேட பெரும்பான்மையினால் மாத்திரமே நிறைவேற்றப்படவேண்டும்.

**வாசகம் 39(1),** அரசியலமைப்பின் 12 (1) எனும் உறுப்புரையின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதுள்ளதால் பாராளுமன்றத்தின் விசேட பெரும்பான்மையினால் மாத்திரமே நிறைவேற்றப்படவேண்டும். எவ்வாறாயினும், உயர் நீதிமன்றத் தீர்மானத்தின் தொகுப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு **வாசகம் 39(1)** திருத்தப்படின் குறிப்பிட்ட ஒவ்வாமை நீங்கும்.

**வாசகம் 63,** அரசியலமைப்பின் 3 ஆம் உறுப்புரையுடனும் 12(1), 55(1), 55(3), எனும் உறுப்புரைகளுடனும் 108 ஆம் உறுப்புரையுடனும் 111H ( 1 ) ( ஆ) எனும் உறுப்புரையுடனும் 148 ஆம் உறுப்புரையுடனும் 153இ, 155எ(1) 156ஊ எனும் உறுப்புரைகளுடனும் சேர்த்து வாசிக்கப்படும் 4(இ) எனும் உறுப்புரையுடன் ஒவ்வாதுள்ளதால், இது பாராளுமன்றத்தின் விசேட பெரும்பான்மையினால் மாத்திரமே நிறைவேற்றப்படவேண்டும் என்பதுடன் குடிமக்கள் ஒப்பங்கோடலினால் அங்கீகரிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், உயர் நீதிமன்றத் தீர்மானத்தின் தொகுப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு **வாசகம் 63(2)** திருத்தப்படின் குறிப்பிட்ட ஒவ்வாமை நீங்கும்.

**வாசகம் 68,** அரசியலமைப்பின் 12 (1) எனும் உறுப்புரையின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதுள்ளதால், பாராளுமன்றத்தின் விசேட பெரும்பான்மையினால் மாத்திரமே நிறைவேற்றப்படவேண்டும். எவ்வாறாயினும், உயர் நீதிமன்றத் தீர்மானத்தின் தொகுப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு **வாசகம் 68(1)** திருத்தப்படின் குறிப்பிட்ட ஒவ்வாமை நீங்கும்.

**வாசகம் 69,** அரசியலமைப்பின் 3 ஆம் மற்றும் 76 ஆம் உறுப்புரைகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 4(அ) எனும் உறுப்புரையினை மீறுகின்றமையினால், பாராளுமன்றத்தின் விசேட பெரும்பான்மையினாலும் ஒப்பங்கோடலில் குடிமக்களினாலும் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

'அரச பொறுப்புமுயற்சியாண்மை' எனும் வரைவிலக்கணம் அரசியலமைப்பின் 12(1) எனும் உறுப்புரையுடனும் அரசியலமைப்பின் 48 ஆம் உறுப்புரையுடனும் ஒவ்வாதுள்ளதால், இது பாராளுமன்றத்தின் விசேட பெரும்பான்மையினால் மாத்திரமே நிறைவேற்றப்படவேண்டும். எவ்வாறாயினும், உயர் நீதிமன்றத் தீர்மானத்தின் தொகுப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வரைவிலக்கணம் திருத்தப்படின் குறிப்பிட்ட ஒவ்வாமை நீங்கும்.

உயர் நீதிமன்றத்தின் தீர்மானம் இன்றைய பாராளுமன்ற நடவடிக்கைகளின் உத்தியோகபூர்வ அறிக்கையில் அச்சிடப்பட வேண்டும் என நான் உத்தரவிடுகின்றேன்."

**III**

"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 79 ஆம் இலக்க உறுப்புரையின் பிரகாரம், 2024 யூன் 27 ஆம் திகதி **"இலங்கை மின்சாரம்"** எனும் சட்டமூலத்தில் என்னால் சான்றுரை எழுதப்பட்டதென்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்."

**IV**

"அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் **"வெளிநாட்டு தீர்ப்புக்களைப் பரஸ்பரம் ஏற்றங்கீகரித்தல், பதிவுசெய்தல் மற்றும் வலுவுறுத்துதல்"** எனும் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்திற்கு 2024.07.01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட மனுவொன்றின் பிரதி எனக்குக் கிடைத்துள்ளதென்பதை பாராளுமன்றத்திற்கு அறிவிக்க விரும்புகின்றேன்."

**V**

"திருகோணமலை தேர்தல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ இராஜவரோதயம் சம்பந்தன் அவர்களது மறைவினால் அரசியலமைப்பின் 66(அ) உறுப்புரையின் பிரகாரம் 2024 யூன் 30 ஆம் திகதியிலிருந்து இப்பாராளுமன்றத்தின் உறுப்புரிமையில் வெற்றிடமொன்று ஏற்பட்டுள்ளதாக இச்சபைக்கு தெரிவிக்க விரும்புகிறேன்.

அவர்களது மறைவினை இப்பாராளுமன்றத்திற்கு நான் மிகவும் கவலையுடன் அறியத்தருகின்றேன். அவரது மறைவினால் எமக்கு ஏற்பட்ட இழப்பு குறித்து நாம் அதிகம் வருந்துவதோடு இந்த கௌரவ உறுப்பினரின் குடும்பத்தினருக்கு பாராளுன்றம் சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதாக நான் அறிவிக்க விரும்புகின்றேன்.

இது தொடர்பான அனுதாபப் பிரேரணை பின்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

மேலும், இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக அன்னாரது பூதவுடல் 2024 யூலை 03 ஆம் திகதி, அதாவது நாளை பாராளுமன்றப் பிரதான நுழைவாயிலுக்கு அருகிலுள்ள வைபவ மண்டபத்தில் பிற்பகல் 2.00 மணி முதல் பிற்பகல் 4.00 மணி வரையில் வைக்கப்படுமென்பதை அனைத்து கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அறிவித்துக் கொள்கின்றேன்."

**4. பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல்:** கௌரவ பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர், 1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, அத்தியாவசிய பொதுமக்கள் சேவைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதி அவர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய, 2024 யூன் 29 ஆம் திகதிய 2390/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் அதன் அட்டவணையில் பிரசுரிக்கப்பட்ட பிரகடனத்தினைப் பிரேரித்தார்.

மேற்படி பத்திரம் **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**5. சமுகமளிக்காதிருப்பதற்கு அனுமதிகோரும் பிரேரணைகள்:** கௌரவ சட்டத்தரணி லக்ஷ்மன் கிரிஎல்ல அவர்கள், கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம் அனுவதிக்க சமர்ப்பித்த பிரேரணை,— அரசியலமைப்பின் 66 (ஊ) உறுப்புரையின் கீழ், யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ ஜீ.ஜீ. பொன்னம்பலம் அவர்களுக்கு 2024 யூலை 02 ஆம் திகதி முதல் மூன்று மாதங்களுக்கு பாராளுமன்ற அமர்வுகளுக்குச் சமுகமளிக்காதிருப்பதற்கு அனுமதி கோரும் பிரேரணையை சமர்பித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**6. கௌரவ சனாபதியின் உரை:** கௌரவ சனாபதிபதி அரசியலமைப்பின் 32(4) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்தில் உரையாற்றினார்.

**7. மருத்துவம் (திருத்தம்):** சுகாதார அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் சமர்ப்பித்த சட்டமூலம்,— (105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

இச் சட்டமூலம் 2024 யூலை மாதம் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரண்டாம் மதிப்பீடு செய்யப்படும் என்றும் இச் சட்டமூலம் அச்சிடப்பட வேண்டுமெனவும் சுகாதாரம். பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

**8. மருத்துவம் (திருத்தம்):** சுகாதார அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் சமர்ப்பித்த சட்டமூலம்,— (105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

இச் சட்டமூலம் 2024 யூலை மாதம் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரண்டாம் மதிப்பீடு செய்யப்படும் என்றும் இச் சட்டமூலம் அச்சிடப்பட வேண்டுமெனவும் சுகாதாரம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

**9. பாராளுமன்ற அலுவல்கள்(இல. 1):** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும், பி.ப. 1.00 மணி முதல் பி.ப 5.00 மணி வரையும் இருக்குமாக. பி.ப. 5.00 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**10. பாராளுமன்ற அமர்வுகள் (இல. 2):** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2024 யூலை 09 ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 மணி வரை ஒத்திவைக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**11. ஒத்திவைப்பு:** “இப்பாராளுமன்றம் இப்போது ஒத்திவைக்கப்படுமாக” என பாராளுமன்றச் சபை முதல்வர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மு.ப. 11.06 மணிக்கு சபாநாயகரால் இன்றைய சபைத் தீர்மானத்திற்கமைய 2024 யூலை 09 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 மணி வரை பாராளுமன்றம் வினாவின்றி ஒத்திவைக்கப்பட்டது.